# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 28/2019 | Date : 17.03.2023 | PW1 |
|---|---|---|
| Name: ஜெயம் | W/o. **சிவாமணி** | |
| Evidence Recorded Time: 1.21 P.M. to 01.40 P.M. | | |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 7 ஏக்கர் நிலம் உள்ளது. 2, 3 மனுதாரர்களான எனது மகள்களுக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது என்றால் சரிதான். திருமணம் நடைபெற்றது முதல் அவர்கள் அவரவர் கணவர் வீடுகளில்தான் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் கணவர் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் விவசாயம் தான் செய்து வந்தார். என் கணவருக்கு விவசாயத்தை தவிர வேறு தொழில்கள் இல்லை என்றால் சிறிய அளவில் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார். அதற்கு உரிய ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. என் கணவருக்கு நீரிழிவு நோய், சிறுநீரக நோய் போன்ற நோய்கள் உள்ளது என்றால் இல்லை. அவர் இறக்கும் போது அவருக்கு வயது 68 அல்லது 69 இருக்கும் என்றால் சரிதான். விபத்திற்கு முன்பு என்ன சிசிக்சை எடுத்துக்கொண்டிருந்தார் என்றால் அவருக்கு எந்த நோயும் இல்லை. என் கணவருக்கு நீரிழிவு நோயும், சிறுநீராக கோளாறும் இருந்தது என்றால் சரியல்ல. விபத்து அன்று என் கணவர் என்ன வண்டி ஓட்டி சென்றார் என்றால் ஹோண்டா சைன் என்ற வாகனத்தை ஓட்டி சென்றார். விபத்தின் போது அவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் அணிந்துதான் சென்றார். தலைக்கவசம் அணிந்து அவர் வாகனத்தை ஓட்டி சென்றிருந்தால் அவருக்கு தலையில் காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல, ஓட்டுநர் உரிமம் இருந்தது. ஓட்டுநர் உரிமத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்பதால் அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டியை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றாலும் சரியல்ல. விபத்தை எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால் 11 மணி வாக்கில் நடைபெற்றது. என் கணவருக்கு நீரிழிவு நோய் இருந்ததால், அவருக்கு திடீரென சர்க்கரையின் அளவு அதிகமாகி மயக்கம் ஏற்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்ததை நேரில் பார்க்கவில்லை. விபத்தை நேரில் பார்த்த யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிர் வந்து மோதிய டாடா ஏசி வாகனத்திற்கு முறையான பர்மிட் இல்லை என்பதாலும், அந்த

வாகனம் எப்.சி செய்யப்படவில்லை என்பதால் இழப்பீடு வழங்க இன்சூரன்ஸ் நிறுவனம் கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. டாடா ஏசி வாகனத்தின் டிரைவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் நான் அவருடைய ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு சுதா மருத்துவமனையில் ரத்தத்தை சுத்தம் செய்யும் டையாலிஸிஸ் சிகிச்சை செய்யப்பட்டது என்றால் சரிதான். சிறுநீரக பிரச்சனை உள்ளவர்களுக்குதான் மேற்படி சிகிச்சை செய்யப்படும் என்றாலும் அந்த காரணத்தினால்தான் என் கணவருக்கு மேற்படி சிகிச்சை செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. என் கணவருக்கு சிறுநீரக கோளாறு, நீரிழிவு பிரச்சனை காரணமாகத்தான் அவர் இறந்துவிட்டார் என்றாலும் விபத்து காரணமாக அவர் இறக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் விபத்து சிகிச்சைக்கான பில்கள் இல்லை என்றாலும் வேறு சிகிச்சைகளுக்குரிய பில்களை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. முறையான டிஸ்சார்ஜ் சம்மரியை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ராயல் கேர் மருத்துவமனையில் கொடுத்த சிகிச்சையில் ஏற்கனவே சிறுநீரகம் பாதிக்கப்பட்டதால்தான் இறப்பு ஏற்பட்டதாக இறப்பிற்கான காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது மட்டும் காரணம் இல்லை. மனுவின் 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாததால் இழப்பீடு வழங்க காப்பீட்டு நிறுவனம் பொறுப்பில்லை என்றால் சரியல்ல. வேறு சிகிச்சைகளை எடுத்துக்கொண்டு இழப்பீடு அதிகம் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் பில்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2, 3 மனுதாரர்கள் அவரவர் கணவர்களுடைய ஆதரவில் இருப்பதால் என்னுடைய கணவரின் ஆதரவில் இருப்பதாக தவறாக கூறியுள்ளதால் இழப்பீடு வழங்க முடியாது என்றால் சரியல்ல. அவருடைய நோய் தாக்கத்தினால் என் கணவரும் விபத்திற்கு ஒரு காணரம் என்றால் சரியல்ல. 3–ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஓம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.